**தலைப்பு 112 – வெளிநாட்டு அமைச்சு**

1. **நிதிக்கூற்றுக்கள்**

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெளிநாட்டு அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று. அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் வெளிநாட்டு அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 07 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.

---------------------------------------------------------------------------

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பபான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------

### 1.6.1 கட்டுநிதி இணக்க கணக்கு

------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | ------------------------------------ | -------------------------------- | ----------------------- |
| (அ) | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய செலவு விடயங்களுக்காக ஏற்கப்பட்ட செலவினம் ரூபா 220,670,748 ஆக காணப்படினும் அது ரூபா 223,313,053 என கட்டுநிதி இணக்க கணக்கிற்கு இணக்கப்பட்டதன் காரணத்தினால் ரூபா 2,642,305 கூடுதலான அக் | கணக்காய்வு அறிக்கையில் ஏனைய செலவின கணக்குகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 220,670,748 ஆன தொகையாகும். எனினும், அதற்கு மேலதிகமாக இந்த அமைச்சிற்கு புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த இராஜாங்க அமைச்சிற்கு | 2020 நவம்பர் 20 ஆம் திகதிய வரவு செலவு சுற்றறிக்கை 06/2020 இன் பிரகாரம் புதிய செலவிட விடயங்களுக்காக ஏற்கப்படுகின்ற செலவினம் நாளேட்டு மாற்றல்களினூடாக |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கிற்கு இணக்கம் செய்யப்பட்டிருந்தது. | தொடர்புடைய முற்பண பீ கணக்கின் கீழான செலவினங்களுக்காகவும் இந்த அமைச்சின் பணம் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட முடியுமென்பதனால் அவ் அமைச்சின் முற்பண செலுத்தல்கள் றேகொள்ளப்பட்ட ரூபா 2,607,081 ஆன தொகை மற்றும் செலவின கணக்கு இல 155 இன் கீழ் முற்பணம் செலுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 35,223.18 ஆன தொகையும் உள்ளடக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் கட்டுநிதி இணக்க கணக்கிற்கு கொண்டு வரப்பட்டுள்ள ரூபா 223,313,053 ஏனைய செலவின கணக்குகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள செலவினமென காண்பிக்கின்றேன். | புதிய செலவு விடயத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும். |
| **(ஆ)** | முற்பண பீ கணக்கிற்கு தொடர்புடையதாக திறைச்சேரி கணினி அச்சு குறிப்பின் பிரகாரம் மீளாய்வாண்டின் பெறுவனவு பெறுமதி மற்றும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் பெறுவனவு பெறுமதி இடையேயான வேறுபாடு 20,151,655 ஆக விருப்பினும் முற்பண இணக்க கணக்கிற்கு ரூபா 10,211,026 மட்டும் இணக்கம் செய்யப்பட்டிருந்தது. | முற்பண பீ கணக்கிற்கு தொடர்புடைய திறைச்சேரி கணினி அச்சில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையான ரூபா 10,211,026 ஆன தொகை சரியானதுடன் அதற்காக கணக்கிடப்பட்டு முற்பண பீ கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இத் தொகை சிகாஸ் நிகழ்ச்சிநிரலுக்கு உள்ளடக்கபடாததுடன் கடன்பட்டோர் பதிவேட்டில் (CC10) அகற்றப்பட்டுள்ளது. | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிக்காட்டல இல 06 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| **(இ)** | திறைச்சேரி கணினி அச்சு குறிப்பின் பிரகாரம் மீளாய்வாண்டில் முற்பண பீ கணக்கிற்கு தொடர்புடைய கொடுப்பனவு பெறுமதி மற்றும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதி பிரகாரம் கொடுப்பனவு பெறுமதி | முற்பண பீ கணக்கிற்கு தொடர்புடைய திறைச்சேரி கணினி அச்சில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையான ரூபா 24,061,814 ஆன தொகை சரியானதுடன் அத் தொகை கணக்கிடப்பட்டு | -மேற்கூறப்பட்டவாறு- |

| | | | |
|---|---|---|---|
| | இடையேயான வேறுபாடு ரூபா 2,701,974 ஆகவிருப்பினும் முற்பண இணக்க கணக்கிற்கு ரூபா 24,061,814 என இணக்கம் செய்யப்பட்டிருந்தது. | கடன்பட்டோர் பதிவேட்டிற்கு (CC10) உள்ளடக்கப்பட்டு இறுதி கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | ஒருங்கிணைந்த பரீட்சை மீதி மற்றும் திறைசேரி கணினி அச்சு குறிப்பின் பிரகாரம் வைப்பு பெறுவனவுகளில் ரூபா 35,164 ஆன வேறுபாடு காணப்படினும் கட்டுநிதி இணக்க கணக்கிற்கு இவ் வேறுபாடு இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கு தயாரிக்கப்படலுக்கு தொடர்புடைய வழிக்காலட்டல் 06 இன் 07 பிரகாரம் கட்டுநிதி இணக்க கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்டவாறு பரீட்சை மீதி மற்றும் திறைச்சேரி கணினி அச்சு குறிப்புக்களில் வேறுபாடு சீராக்கல்கள் தேவையானதா என ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்படவில்லை. | -மேற்கூறப்பட்டவாறு- |

### 1.6.2 நிதி நிலைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் அகற்றப்பட்டிருந்த 13 வாகனங்களில் 07 வாகனங்களின் கிரயமான ரூபா 42,025,801 மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் காண்பிக்கப்பட்டிருந்த வாகன மீதியில் அகற்றப்படாமையின் காரணத்தினால் நிதியல்லாச் சொத்துக்களுக்கான கூற்றில் வாகனங்கள் கிரயம் அப் பெறுமதியினால் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அகற்றப்பட்ட 07 வாகனங்களின் கிரய பெறுமதியான ரூபா 42,025,801 ஆன தொகை 2020 ஆம் ஆண்டின் கணக்கின் ஊடாக தவறுதலாக அகற்றப்படாமையினால் மீளாய்வாண்டின் நிதியல்லாச் சொத்துக்களுக்கான கூற்றில் பெறுமதி ரூபா 42,025,801 அதிகமாக காண்பிக்கப்படுகின்றது. அகற்றப்பட்ட வாகனங்கள் 2021 ஆம் ஆண்டில் கணக்கு முன்வைக்கப்படும் போது அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | அகற்றப்பட்ட சொத்துக்கள் நிதியயல்லாச் சொத்துககளுக்கான கூற்றிலிருந்து அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.6.3 நிதிச் செயலாற்றல் கூற்று**

-------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளாக ரூபா 3,060,448,277 என காண்பிக்கப்பட்டிருப்பினும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட அட்டவனையின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 3,059,530,503 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகள் ரூபா 917,774 இனால் அதிகமாக காணப்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் என கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. | நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய பெறுவனவுகள் சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். |

**1.6.4 காசுப் பாய்ச்சல் கூற்று**

-------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| **(அ)** | **செயற்பாடு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சல்** | | |
| (i) | ஒருங்கிணைந்த பரீட்சை மீதி பிரகாரம் வருமானமில்லாத பெறுவனவு காசுப் பாய்ச்சல் ரூபா 2,389,880,478 ஆக விருப்பினும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 115,868,505 | 2020/06/12 ஆம் திகதி உங்களால் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையில் 1.6.2.1 | 2020 ஆம் ஆண்டிற்காக அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிக்காட்டல் இல 06 இன் பிரகாரம் காசுப் |

| | | | |
|---|---|---|---|
| | என காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியில் உள்ளடக்கப்படாத ஏனைய விடயங்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 2,168,408,321 காசுப் பாய்ச்சல் கூற்றில் காசுப் பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது, கடந்த ஆண்டில் எங்களால் காசு அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை என்பதாகும். அதனால் உங்கள் திணைக்களத்தினால் காண்பிக்கப்பட்ட குறைப்பாட்டினை சரிசெய்து இந்த ஆண்டில் காசு அடிப்படையில் காசு பாய்ச்சல் தயாரிக்கப்பட்டுள்ளமையை தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். | பாய்ச்சல் கூற்று தோராயமான அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளமை காரணத்தினால் அவ் அடிப்படை பின்பற்றப்படல் வேண்டும். |
| (ii) | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் தனிநபர் சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவின பெறுமதி ரூபா 10,061,370,232 ஆகவிருப்பினும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அப் பெறுமதி ரூபா 9,422,254,088 என குறிப்பிடப்பட்டிருந்தமையினால் ரூபா 639,116,144 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | மேற்கூறப்பட்டவாறு- | மேற்கூறப்பட்டவாறு- |
| (iii) | காசுப் பாய்ச்சல் கூற்றில் ஏனைய செலவு விடயங்களுக்காக ஏற்கப்பட்ட செலவினம் ரூபா 183,126,849 காண்பிக்கப்பட்டிருப்பினும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 220,670,748 ஆகியதனால் வேறுபாடு ரூபா 37,543,899 ஆக காணப்பட்டது. | -மேற்கூறப்பட்டவாறு- | மேற்கூறப்பட்டவாறு- |
| **(ஆ)** | **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சல்** --------------------------------- | | |
| (i) | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பணம் அறவிடல் ரூபா 63,627,057 ஆகவிருப்பினும் அப் பெறுமதி ரூபா 2,040,238 என காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தமையினால் ரூபா 61,586,819 குறைவாக காசுப் பாய்ச்சல் கூற்றிக்கு | -மேற்கூறப்பட்டவாறு- | -மேற்கூறப்பட்டவாறு- |

| | | | |
|---|---|---|---|
| | சீராக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பண செலுத்தல் பெறுமதி ரூபா 49,605,057 ஆகவிருப்பினும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அப் பெறுமதி ரூபா 65,309,682 என காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 15,704,625 முற்பண செலுத்தல் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்கூறப்பட்டவாறு- | -மேற்கூறப்பட்டவாறு- |
| (iii) | முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் சொத்து கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகள் கையகப்படுத்தல் என ரூபா 185,502,310 காண்பிக்கப்பட்டிருப்பினும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் மீளாய்வாண்டின் சொத்து கையகப்படுத்தல் ரூபா 70,399,077 மட்டுமாக காணப்பட்டது. | -மேற்கூறப்பட்டவாறு- | -மேற்கூறப்பட்டவாறு- |
| **(இ)** | **நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சல்**<br>---------------------------------- | | |
| (i) | நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் ரூபா 1,330,409,586 வைப்பு பெறுவனவாக காண்பிக்கப்பட்டிருப்பினும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 1,452,471,015 ஆகவிருந்தமையினால் வேறுபாடு ரூபா 122,061,429 ஆக காணப்பட்டது. | -மேற்கூறப்பட்டவாறு- | -மேற்கூறப்பட்டவாறு- |
| (ii) | நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் வைப்பு செலுத்தளாக ரூபா 1,304,509,579 காண்பிக்கப்பட்டிருப்பினும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 1,595,777,211 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 291,267,632 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | -மேற்கூறப்பட்டவாறு- | -மேற்கூறப்பட்டவாறு- |

**1.6.5 கட்டுபணம் மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அமைச்சின் இரு கட்டுபணம் கணக்குகளின் மீதி ரூபா 825,645,104 ஆகவிருப்பினும் திறைச்சேரி அச்சிடலின் பிரகாரம் அம் மீதி ரூபா 879,242,556 ஆக காணப்பட்டமையினால் ரூபா 53,597,452 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும், 2013 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னரான காலபகுதிக்கு தொடர்புடைய கட்டுநிதி கணக்கின் மீதியில் தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 91,530,099 உள்ளடக்கப்பட்டிருந்தது. | ரூபா 53,597,452 ஆன வேறுபாட்டிற்கு காரணமாவது அமைச்சினால் வெளிநாட்டு தூதரகத்திற்காக திசெம்பர் மாதத்தினுள் அனுப்பப்பட்ட கட்டுநிதி ரூபா 50 மில்லியன் வங்கி தாமதத்தினால் வெளிநாட்டு தூதரகத்திற்கு அனுப்ப தாமதமாகிய காரணத்தினால் அப்பணம் நிகழ்நிலையில் வைத்திருத்தல் மற்றும் எஞ்சிய ரூபா 3,639,319.79 கட்டுநிதி விடுவிக்கும் போது ஏற்பட்ட இலாப நட்ட சீராக்கல் மற்றும் திசெம்பர் மாத இறுதியில் வெளிநாட்டு தூது குழுவின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட முற்பண சீராக்கலாகும். | திறைச்சேரி கணனி அச்சு புத்தகத்தின் பிரகாரம் மற்றும் அமைச்சின் புத்தகங்களின் பிரகாரம் கட்டுபணம் மீதி இணக்கம் செய்யப்பட்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.6 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

அமைச்சினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | **பிணைகள் பதிவேடு**<br>நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் விதத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (ஆ) | **நட்டங்கள் தொடர்பான பதிவேடு**<br>நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லபடுகின்றதுடன் அது நாளதுவரையாகப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளுக்கமைய அதன் கீழான மாதிரிக்கமைய நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

### 1.6.7 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளர்வாண்டில் 67 வெளிநாட்டு தூதரகங்களில் 09 தூதரகங்களிற்கு தொடர்புடையதாக ரூபா | தூதரகங்களிலிருந்து குறித்த காலத்தில் கொடுப்பனவு வவுசர் அனுப்புவதற்கு தாமதமாகல் தொடர்பாக | அனைத்து கொடுப்பனவு வவுசர்களையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு |

| | | | |
|---|---|---|---|
| | 9,135,600,970 ஆன மீண்டெழும் செலவினம் மற்றும் ரூபா 158,312,300 ஆன மூலதன செலவினம் பரீட்சிப்பதற்கு தொடர்புடைய கொடுப்பனவு வவுசர் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | அனைத்து தூதரகங்களுக்கும் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | டகா தூதரக 1804000073 ஆம் இலக்க வங்கி கணக்கிற்காக முன்வைக்கப்பட்டிருந்த வங்கி கணக்கு இணக்க கூற்றில் டகா 2,101,250 ஆன வைப்பு செய்யப்பட்ட போதிலும் தீர்க்கப்படாத 04 காசோலைகளின் பெறுமதிகள் சான்றுபடுத்தும் தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | வங்கி கணக்கிணக்க கூற்றில் தீர்வு செய்யப்படாத 4 காசோலைகள் தொடர்பாக அட்டவணை முன்வைக்குமாறு தூதரகங்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுமதி உறுதி செய்யும் அட்டவணைகள் கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 7002-0-0-035/13 ஆம் இலக்க கட்டுபணம் கணக்கின் கீழ் அமைச்சு 179 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொடுக்கப்பட்ட ரூபா 39,550,728 ஆன முற்பணம் எந்த விடயத்திற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என்று அடையாளப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 7002-0-2-35/13 கட்டுபணம் கணக்கில் தற்போது குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மீதிகளும் வெளிநாட்டு தூதரகத்திலிருந்து விசாரித்து முறையாக அடையாளப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | எந்த விடயத்திற்கு முற்பணம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என்று சரியாக அடையாளப்படுத்தப்படுவத ற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

--------------------

## 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகினறன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | ---------------------------------------- | ---------------------------------- | ----------------- |
| (அ) | **7002-0-0-035/13 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கு** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதி திகதிக்கு கட்டுநிதி கணக்கின் மீதி ரூபா 91,530,099 ஆக காணப்பட்டதுடன், அது 2013 ஆண்டிற்கு மற்றும் அதற்கு முன்னரான காலப்பகுதிக்கு தொடர்பான தீர்க்கப்படாத முற்பணங்களில் தயாரிக்கப்பட்டிருந்து. அவ் முற்பணங்களில் ரூபா 51,979,371 வெளிநாட்டு தூதரக சேவைக்காக வெளிநாடு செல்லும் பதவியணியினருக்கு பெற்றுக் கொடுக்கின்ற வீடுகளுக்காக வைக்கப்படுகின்ற பாதுகாப்பு வைப்புக்கள் 173 ஐ கொண்டிருந்தது. அப் பெறுமதியில் ரூபா 4,285,061 20 ஆண்டுகளை கடந்திருந்ததுடன், ரூபா 44,284,956 10 ஆண்டுகளுக்கும் 20 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தினுள்ளும், எஞ்சிய வைப்புக்கள் மீதி ரூபா 3,409,354 07 ஆண்டுகளை கடந்திருந்தது. | 7002-0-0-35/13 என்ற கட்டுநிதி கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள முற்பணம் கடந்த ஆண்டுகளில் 100 மில்லியனை விஞ்சி இருப்பினும் எங்கள் அமைச்சினால் முற்பணம் மீண்டும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் விளைவாக 7002-0-2-35/13 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கில் தற்போது ரூபா 91,530,099 எஞ்சியிருக்கிறது. மேலும் கடந்த ஆண்டுகளில் காணப்பட்ட இந்த தீர்க்கப்படாத முற்பணம் அறவிடப்படுவதற்கு அல்லது குறித்த முறைமைக்கேற்ப தள்ளுபடி செய்வதற்கு குறித்த நடவடிக்கைகள் எடுப்பதற்காக அமைச்சினால் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்டும். | தீர்க்கப்படாத முற்பணம் விரைவாக அறவிடப்படுவதற்கு அல்லது முறையான அங்கீகாரத்துடன் தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | வீட்டு பிணை / பாதுகாப்பு வைப்பு 173 இல் 165 இற்கு தொடர்புடைய ரூபா 47,954,750 தற்போது வெளிநாட்டு தூதரக பதவியணியினரினால் பயன்படுத்தப்படாத | வீடுகளுக்காக வைப்பக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்புக்கள் அறவிடப்படுவதற்காக அமைச்சினால் வெளிநாட்டு தூதுவர் சபைக்கு | வெளிநாட்டு தூதரக சபை பதவியணியினரினால் பயன்படுத்தப்படாத வீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | வீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்புக்களாக காணப்பட்டது. அவ் வைப்புக்கள் அறவிடப்படல் தொடர்பாக வெளிநாட்டு அமைச்சின் தூதரக கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் நாயகத்தினால் 250 ஆம் இலக்க 2009 செப்தெம்பர் 01 திகதிய உள்ளக சுற்றறிக்கை ஊடாக ஆலோசனைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு அவ் வைப்பு தொகை மீண்டும் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவ்வப்போது உள்ளக சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டன. மேலும், அவ் வைப்புக்கள் அறவிடப்படுவதற்காக வெளிநாட்டு தூதரக சபைகளிடமிருந்து விசாரித்து தேவையான தகவல்கள் பெறப்பட்டது. அதன் பிரகாரம் அவ் வைப்புக்கள் மீண்டும் அறவிடப்படுவதற்கு எதிர்காலத்தில் குறித்த முறைமையொன்று பின்பற்றப்படுவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படும். | பாதுகாப்பு வைப்புக்கள் அறவிடப்படுவதற்கு முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| **(ஆ)** | **7002-0-0-035/20 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கு** | | |
| **(i)** | மீளாய்வாண்டின் இறுதி திகதிக்கு கட்டுநிதி கணக்கு மீதியினுள் தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 355,085,724 ஆக காணப்பட்டதுடன் அப் பெறுமதியினுள் உள்ளடக்கப்பட்ட வெளிநாடு சென்ற பதவியணியினருக்கு பெற்றுக் கொடுக்கின்ற வீடுகளுக்காக வைக்கப்பட்ட பாதுகாப்பு வைப்பு ரூபா 20,464,959 10 ஆண்டுகளை விஞ்சி காணப்பட்டதுடன் ரூபா 49,112,123 05 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதியினுள் பெறுமதி கொண்டிருந்தது. மேலும், இந்த பாதுகாப்பு வைப்புக்களில் தூதரங்க பதவியணியினர் வசிக்காத வீடுகளுக்காக வைக்கப்பட்டிருந்த 56 வைப்புக்களின் பெறுமதி ரூபா 21,275,938 ஆக காணப்பட்டது. | தற்போது வசிக்காத வீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்புக்கள் மீண்டும் அறவிடப்படுவதற்காக அமைச்சினால் வெளிநாட்டு தூதரங்களுக்கு அவ்வப்போது உள்ளக சுற்றறிக்கை அனுப்பப்பட்டு அப் பாதுகாப்பு வைப்புக்கள் அறவிடப்படுவதற்கு காணப்படுகின்ற சிரமங்கள் விசாரிக்கப்பட்டன. அதற்காக தேவையான குறித்த தகவல்கள் தற்போது சேர்க்கப்பட்டு வரப்படுகின்றதுடன் எதிர்காலத்தில் இதற்காக குறித்த நடவடிக்கைகள் திட்டமிடப்படும். | வெளிநாட்டு தூதரக உத்தியோகத்தர்களின் சேவை முடிவுறுத்தும் சந்தர்ப்பத்தில் வீடுகளுக்காக வைக்கப்படுகின்ற பாதுகாப்பு வைப்புக்கள் அறவிடப்படுவதற்கு முறைமையொன்று தயரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ii)** | தூதரகங்களில் தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 23,293,715 தற்காலிக இடைக்கால கட்டுநிதியாக காணப்பட்டதுடன், அவ் முற்பணத்தினுள் 2018 ஆம் ஆண்டிற்கு முன் காலத்திற்கு தொடர்புடைய ரூபா 9,168,655 உம், 2018 ஆம் ஆண்டிற்கு தொடர்படையதாக ரூபா 813,741 உம், 2019 ஆம் ஆண்டிற்கு தொடர்புடைய ரூபா 3,912,255 உம் ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி பிரமாணம் 371 இன் பிரகாரம் தற்காலிக இடைகால கட்டுநிதி அப்பணிகள் நிறைவடைந்தவுடனே தீர்க்கப்பட வேண்டியிருப்பினும் அப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்படாத முற்பணம் முடிந்த வரையில் விரைவாக தொடர்புடைய தூதரகங்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சினால் எதிர்காலத்தில் அவ்வாறான தற்காலிக இடைக்கால கட்டுநிதி முறையாக அப் பணிகளின் இறுதியில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு தொடர்புடைய தூதரங்களுக்கு சுற்றறிக்கை ஊடாக ஆலோசனை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பணி நிறைவடைந்தவுடனே முற்பணம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதி பிரமாணம் 50 (II) பிரகாரம் மதிப்பீடு முடிந்தவரையில் முழுமையாக மற்றும் சரியாக தயாரித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமையாகவிருப்பினும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் 18 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பணத்தில் 51 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் மொத்த பெறுமதி ரூபா 141,180,009 ஆன நிதியேற்பாடு குறைப்பயன்பாடுடன் காணப்பட்டது. | மதிப்பீடு தயாரித்தல் நிதி பிரமாணம் 50 (II) இன் பிரகாரம் முழுமையான, சரியாகவும் தாயரிக்கப்பட்டிருப்பினும், கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள 18 செலவு விடயங்களின் அவ்வவ் செலவு விடயத்தில் நிதியேற்பாட்டில் 51% தொடக்கம் 100 % வரையான வீச்சில் மொத்த பெறுமதி ரூபா 141,180,009 ஆன ஏற்பாடு குறைபயன்பாடு ஏற்பட்டிருந்தமையை ஏற்றுக் கொள்கின்றேன். | மதிப்பீடு முடிந்தவரையில் முழுமையாக சரியாக தயாரித்தல் வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2021 ஆம் ஆண்டில் கொடுப்பனவு உறுதிச்சீட்டு தொடர்பாக மாதிரி பரிசோதனையின் போது 2020 ஆம் ஆண்டில் செலவாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,553,856 ஆன பொறுப்பு தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு தொடர்புடைய மாதிரியின் பிரகாரம் அமைச்சின் மற்றும் வெளிநாட்டு தூதரங்களில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு தொடர்புடைய தகவல்கள் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்படுகின்றது. அத் தகவல்கள் அடிப்படையாகக கொண்டு நிதிக் கூற்றுக்களுக்கு பொறுப்புக்கள் உள்ளடக்கப்படும். எனினும் தகவல்கள் வழங்கப்படும் போதா தாமத குறைப்பாடு காரணத்தினால் சில பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக அமைச்சின் அல்லது தூதரங்களின் தொடர்புடைய அனைத்து உத்தியோகத்தர்களும் தெரியப்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்கள் ஏற்பாடலிருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு குறித்துக்கொள்ளப்படுகின்றதென தயவுடன் தெரியப்படுத்துகின்றேன். | மீளாய்வாண்டிற்கு தொடர்பான அனைத்து பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 2.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| ------------------------------------------- | ---------------------------------------- | ------------------- |
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கப்பூர்வமான உள்ளக முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அம் முறைமையின் ஆக்கப்பூர்வதன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை பயனுடையதாக பேணிச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், அவ் மீளாய்வுகள் எழுத்துமூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும், அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கு அறிக்கை கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் உறுப்புரையின் ஏற்பாட்டின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் அமைச்சின் நிதி கட்டுப்பாட்டிற்காக ஆக்கப்பூர்வமான உள்ளக கட்டுப்பாடு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மீளாய்வு எழுத்துமூலமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசு தாபன விதிக்கோவையின்** | | | |
| | **xxiv அதிகாரத்தின் 4.4,4.5 மற்றும் 4.6 ஆம் உறுப்புரைகள்** | பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் முழுமையாக அறவிடப்படப்படுவதற்கு முன்னர் உத்தியோகத்தரொருவர் மரணித்தால் அவரிடமிருந்து அரசிக்கு அறவிடப்பட வேண்டிய அனைத்து பணமும் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பினும், மரணித்த 06 உட்தியோகத்தர்ளிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 465,050 ஆன மீதி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அம் மீதிகள் ரூபா 408,750 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து தீர்க்கப்படாதிருந்தது. | இக் கடன் மீதி அறவிடப்படுவதற்கு தொடர்புடையதாக ஓய்வூதிய கோப்பின் ஊடாக ஓய்வூதிய பணிப்பாளருக்கு ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடப்படுவதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இதுவரையில் ஓய்வூதிய கோப்பு அங்கீகரிக்கப்பட்டிராமையினால் கடன் மீதி தீர்க்கப்படாதிருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(ஆ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவை**

| | | | | |
|---|---|---|---|---|
| **i.** | **நிதிப் பிரமாணம் 104** | 1 ஆண்டு தொடக்கம் 09 ஆண்டுகள் வரை காலம் கடந்திருந்த ரூபா 3,990,669 ஆன 13 வாகன விபத்துக்கள் தொடர்பாக மற்றும் 2010 ஆம் ஆண்டில் ஏற்பட்டிருந்த ரூபா 1,991,695 ஆன வாகனம் திருடல் தொடர்பாக பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு தூதரக ஆலுவலங்களில் ஏற்படுகின்ற சேத நட்டங்கள் தொடர்பாக குறித்த முறைமையொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் எதிர்காலத்தில் வாகன ஆபத்துக்களிலிருந்து ஏற்படுகின்ற சேத நட்டங்கள் அறவிடப்படுவதற்கு/ புத்தகத்திலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு தேவையான வேலை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. | நிதி பிரமாணம் 104 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **ii.** | **நிதி பிரமாணம் 106** | பற்றாக்குறையொன்று, தவறான பயன்பாடு அல்லது வேறு விடயத்தினால் பணம் காணாமல் போன விடத்து அக் காணாமல் போன பணம் விரைவாக பூரணப்படுத்தப்பட வேண்டியிருப்பினும் 3 வெளிநாட்டு தூதரங்களிற்கு தொடர்படையதாக ரூபா 1,017,626 தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரேமர் தூதுவர் அலுவலகத்தில் ஏற்பட்டிருந்த ரூபா 16,141,919 ஆன தொடர்புடைய பணம் திருடல் தொடர்பாக கொழும்பு உயர் நிதீமன்றத்தில் 02 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அவை பரீட்சிக்கப்பட்டு வருகின்றது. ஏனைய சேதங்கள் தொடர்பாக தொடர்புடைய தகவல்கள் வெளிநாட்டு தூதரகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கைகள் விரைவுப்படுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதி பிரமாணம் 106 பிரகாரம் காணாமல் போன பணம் விரைவாக பூரணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | **iii.** | **நிதி பிரமாணம் 565(5)** | ஒவ்வொரு மாதத்திற்காகவும் தயாரிக்கப்பட்ட மாதாந்த வைப்பு பொழிப்பறிக்கை அடுத்த மாதம் நிறைவடைவதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டியிருப்பினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்காகவும் மாதாந்த வைப்பு பொழிப்பறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பபப்படல் வேண்டும். |
| | **iv.** | **நிதி பிரமாணம் 571** | வைப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து 2 ஆண்டுகள் விஞ்சிய உரிமை கோரப்படாத வைப்புக்கள் அரசின் வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டியிருப்பினும், அமைச்சினால் ரூபா 16,787,484 ஆன வைப்புக்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பரீட்சித்து சரி செய்யப்படுவதற்கு குறித்துக் கொள்கின்றேன். | 2 ஆண்டுகளை விஞ்சிய வைப்பு மீதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | | **2015 ஒக்தோம்பர் 09 திகதிய PFD/RED/2015/08 பொது (i) ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 4.3 (இ) (i) மற்றும் (ii)** | சுற்றறிக்கையின் பிரகாரம் காலாவதியாகிய முற்பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பினும் சேவை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,098,606 ஆன கடன் மீதி அவ்வாறு அறவிடப்பட்டிராததுடன் அதில் ரூபா 666,963 ஆன தொகை 5 ஆண்டுகள் தொடக்கம் அறவிடப்படாது காணப்பட்டது. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கை பிரகாரம் அறவிடப்படுவதற்கு அரச சேவை அமைச்சு மற்றும் தேர்தல் திணைக்களத்திலிருந்து தகவல்கள் கொண்டு வரப்பட்டு மேல் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட்டதுடன், அதனூடாக தொடர்புடைய நபர்கள் தேடப்படுவதற்கு முடியாது போனது. இன்னுமாக அது தொடர்பாக நடவடிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் காலாவதியாகிய அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஈ) | **2006 இன அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 வழிக்காட்டிகள்** | - | குறைந்த பட்சம் 3 ஆண்டு காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்டு பிரதான பெறுகை திட்டமும், அனைத்து பெறுகைகளும் ஆரம்பத்திலிருந்து இறுதி வரையிலான ஒவ்வொரு பெறுகை நடவடிக்கைகளில் படிமுறைகள் காலரீதியாக விவரிக்கும் பெறுகை நேர அட்டவணையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரித்து முடிந்தவுடனே கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | பிரதான பெறுகை திட்டமொன்று மற்றும் பெறுகை நேர அட்டவனையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.6 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கடன் பணத்தில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து காணப்பட்டு வருகின்ற கூட்டுத்தொகை ரூபா 1,499,175 ஆன அடையாளப்படுத்தப்படாத மீதியொன்று காணப்பட்டது. | இந்த கடன் மீதி பல காலமாக காணப்பட்டு வருகின்றதுடன், நிலுவை மீதிகளுக்கு தொடர்பான உத்தியோகத்தர்கள் தொடர்பாக தகவல்கள் தேடுவதற்கு அரச சேவை அமைச்சு மற்றும் தேர்தல் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தி அடையாளங்கள் தேடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படினும், போதுமான தகவல்கள் அடையாளப்படுத்தப்படவில்லை. இதன் பிரகாரம் தகவல்கள் தேடுவதற்கு கடினமானதினால் திறைச்சேரிக்கு தெரியப்படுத்தி மேல் நடவடிக்கைகள் எடுப்பதற்கு செயற்படுவேனென தெரியப்படுத்துகின்றேன். | நிலுவை கடன் மீதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | முற்பண பீ கணக்கின் பிரகாரம் 16 உத்தியோகத்தர்களில் ரூபா 200,129 ஆன தொகை 1 ஆண்டு தொடக்கம் 3 ஆண்டுகள் வரையான கால வீச்சிலிருந்து கூடுதலாக அறவிடப்பட்டிருப்பினும் அம் மீதிகள் 2021 மார்ச் 20 ஆம் திகதி வரையில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சு முற்பண **"B"** கணக்கிற்கு கூடுதலாக அறவிடல் என காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 200,019 ஆன பணம் பரிமாற்ற வீத மாற்றங்கள் அடிப்படையில் கூடுதலாக பெறப்பட்டிருந்த பணமாவதுடன், அதனுள் தற்போது சில உத்தியோகத்தர்களின் பணம் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய உத்தியோகத்தர்கள் மீண்டும் நாடு திரும்பியவுடன் துல்லியத்தன்மை உறுதி செய்யப்பட்ட பின்னர் அவ்வப்போது அப் பணம் அவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | கூடுதலாக அறவிடப்பட்ட கடன் பணம் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.7 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்ட 2020 திசெம்பர் 31 இற்கு வைப்பு கணக்கு தொடர்பான கூற்றின் பிரகாரம் ஒவ்வொரு வைப்பு கணக்கு இலக்கத்தின் கீழ் திறைச்சேரி புத்தகத்தின் பிரகாரம் ஆரம்ப மீதிகள் மற்றும் அமைச்சின் புத்தககங்களின் பிரகாரம் ஆரம்ப மீதிகளுடன் ரூபா 4,521,094 ஆன வேறுபாடு காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | திறைச்சேரி புத்தகத்தின் பிரகாரம் மீதிகள் மற்றும் அமைச்சின் புத்தகத்தின் பிரகாரம் வேறுபாடு காணப்படக் கூடாது. |

## 2.8 வங்கி கணக்குகளை செயற்படுத்துதல்

வங்கி கணக்குகளை செயற்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | அமைச்சின் பெறுமதி ரூபா 1,132,582 ஆன 40 காசோலைகள் மற்றும் 07 வெளிநாட்டு தூதரகங்களின் 89 காசோலைகள் 2020 திசெம்பர் 31 இற்கு வெளியிடப்பட்டிருப்பினும், கொடுப்பனவிற்காக முன்வைக்கப்பட்டிராததுடன் அது தொடர்பாக நிதி பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தூதரகங்களில் வங்கி கணக்குகள் பேணிச் செல்வதற்கு தொடர்புடைய (அ) தொடக்கம் (உ) வரையான பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள குறைப்பாடுகள் சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு அந்தந்த தூதரகங்களுக்கு தெரியப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிதி பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சின் ரூபா 612,729 ஆன 02 காசோலைகள் மற்றும் 03 வெளிநாட்டு தூதரகங்களின் 12 காசோலைகள் அடையாளப்படுத்தப்படாத வரவுகளாக, க்காலலம்பூர் தூதரகத்தின் 04 காசோலைகள் அடையாளப்படுத்தப்படாத செலவாகவும் காணப்பட்டது. | -மேற்கூறப்பட்டவாறு- | அடையாளப்படுத்தப்படாத வரவு மற்றும் செலவு மீதிகள் அடையாளப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | லொஸ்ஏன்ஜல் தூதரகத்தில் 2011 ஆம் ஆண்டில் திருடப்பட்ட 1583 ஐ.அ.டொலர்களும் மொஸ்கட் தூதரகத்தில் 2002 ஆம் ஆண்டில் மற்றும் 2003 ஆம் ஆண்டில் வைப்பு செய்யப்படாத பணமாக 155 ஐ.அ.டொலர்களும் வங்கி கணக்கிணக்க கூற்றினுள் காணப்படினும் அது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்கூறப்பட்டவாறு- | திருடப்பட்ட மற்றும் வைப்பு செய்யப்படாத பணமாக வங்கி கணக்கிணக்க கூற்றினுள் காணப்படுகின்ற மீதி தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயல்நடவடிக்கை திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் கணக்காய்விற்கு முன்வைக்காமை காரணத்தினால், நிறைவேற்றப்படாத செயற்பாடுகள், பிரதான செயற்பாட்டிற்கு முரணான | மீளாய்வாண்டிற்கு தொடர்புடைய செயல்நடவடிக்கை திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள பணிகள் தொடர்பான செயன்முன்னேற்றம் காணப்படுகின்ற அறிக்கை எதிர்காலத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | மீளாய்வாண்டின் செயற்பாடுகளின் செயன்முன்னேற்ற அறிக்கை கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

செயற்பாடுகள், எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு மற்றும் பிலதிலாப மட்டம் பெற்றுக் கொள்ளப்படாமை, செயற்திட்டம் நிறைவேற்றப்படாது கைவிடல் மற்றும் செயற்திட்டம் நிறைவேற்றுவதில் தாமதம் தொடர்பாக பரீட்சிப்பதற்கு முடியாது போனது.

## 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 பந்தியின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்படுகின்ற வருடாந்த கணக்குகளுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும் மீளாய்வாண்டிற்கு தொடர்புடைய செயலாற்றல் அறிக்கை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்கு தொடர்புடைய செயலாற்றல் அறிக்கை தற்போது ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சிங்கள் மொழிக்கு மற்றும் தமிழ் மொழிக்கு மொழிப்பெயர்ப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.<br><br>அதன் பிரகாரம், அவ் அறிக்கை தயாரிக்கப்பட்டவுடனே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எற்பாடு செய்யப்படுமென மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| அமைச்சினால் கொழும்பு 08, எல்விடிகல மாவத்தை, 117 வத்த மாடிவீட்டு வளாகத்தில் 20 வீட்டு அலகுகள் கொள்வனவு செய்யப்படுவதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 70,638,545 ஆன தொகை செலுத்தப்பட்டிருப்பினும் அதில் 17 வீட்டு அலகுகளுக்காக உரித்திரிமை பத்திரிக்கை பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய வீடமைப்பு அதிகார சபை எதிர்காலத்தில் உரித்துரிமை பத்திரிகை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்து அனுப்பப்பட்டுள்ளது. | உரித்துரிமை பத்திரிகை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட சேத மற்றும் விட்டுவிடுதல்கள் தொடர்பான அறிக்கையில் 02 ஆம் இலக்க வேலைத்திட்டத்தின் கீழ் வெளிநாடுகளில் அமைந்துள்ள தூதரகங்களில் 50 நிகழ்வுகளுக்கு | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி சரியானதாகும். காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் தொடர்புடைய பெறுமதி தனி தனியாக அடையாளப்படுத்தப்பட்டு உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஊடாக தகவல்கள் கோரப்பட்டு நிதி பிரமாணம் 106 மற்றும் 113 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு வெளிநாட்டு தூதரக கட்டுப்பாட்டு பிரிவினால் | நிதி பிரமாணம் 104 பிரகாரம் பரீட்சிக்கப்பட்டு தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| தொடர்புடைய இன்னுமாக அறவிடப்படுவதற்கு, பதிவழிப்பதற்கு அல்லது விட்டுவிடுவதற்கு உள்ள ரூபா 27,545,100 ஆன சேதம் தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த கால பகுப்பாய்வு பிரகாரம் அப் பெறுமதியில் ரூபா 1,334,669 ஆன தொகை 10 ஆண்டுகளை விஞ்சி காணப்பட்டதுடன் ரூபா 21,626,285 ஆன தொகை 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடையேயான கால வீச்சில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்படினும், வெளிநாட்டு தூதரகங்களிலிருந்து சரியான தகவல்கள் பூரணப்படுத்தப்பட்டு சேர்க்கப்படும் போது பல பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கப்பட்டுள்ளமையினால் இந் நடவடிக்கை நிறைவு செய்யப்படுவதற்கு தாமதமாகின்றது. இந் நடவடிக்கை குறிப்பிடப்பட்டுள்ள கால பகுப்பாய்வு பிரகாரம் முன்னுரிமை அடிப்படையில் விரைவாக நிறைவு செய்வதற்கு தொடர்புடைய பிரிவுகளுக்கு தெரியப்படுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. |

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | சீஷெல்ஸ் இல் இலங்கை தூதரக அலுவலகத்தின் உயர் ஆனையாளர் பதவி 2020 சனவரி 15 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வு திகதியாகிய 2021 ஏப்ரல் 08 ஆம் திகதி வரை வெற்றிடமாக காணப்பட்டது. அவ்வாறாயினும் உத்தியோகப்பூர்வ இல்லம் வாடகையாக 2020 சனவரி தொடக்கம் 2020 மே வரை காலத்திற்கு தொடர்புடையதாக ரூபா 3,816,805 ஆன தொகை பயன்படுத்தப்படாத உத்தியோகப்பூர்வ இல்லத்திற்காக கொடுப்பனவு | சீஷெல்ஸ் இல் இருந்த உயர் ஆணையாளரின் ஒப்பந்த பதவி காலம் நிறைவு பெறுவதற்கு முன்னர் 2020 சனவரி 14 ஆம் திகதி மீண்டும் நாட்டிற்கு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மீண்டும் உயர் ஆணையாளரொருவர் நியமிக்கப்படுமென்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில் மற்றும் உத்தியோகப்பூர்வ இல்லத்திற்காக ஒப்பந்த காலம் 2020 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை அமுலில் காணப்பட்டமையினால், | பயன்படுத்தப்படாத உத்தியோகப்பூர்வ இல்லத்திற்காக வீட்டு வாடகை செலவு செய்யப்படல் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. | அவ் உத்தியோகப்பூர்வ இல்லத்திற்கு வாடகை கட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயினும், இந்த அமைச்சினால் 2020 ஏப்ரல் 20 ஆம் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் மாதாந்திர முன் அறிப்புடன் 2020 மே 01 ஆம் திகதி தொடக்கம் ஒப்பந்தம் முடிவுறுத்தப்படுவதற்கு உயர்ஸ்தானிகர் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. எவ்வாறாயினும், 2020 சனவரி 15 தொடக்கம் 2020 மே வரை 31 ஆம் திகதி வரை உத்தியோகப்பூர்வ இல்லத்திற்காக வாடகையாக ரூபா 3,816,805 ஆன பணம் செலுத்துவதற்கு நேரிட்டுள்ளது. | |
| (ஆ) | பலஸ்தீனத்தில் அமைந்துள்ள தூதரக அலுவலகம், உத்தியோகப்பூர்வ இல்லம் மற்றும் குடியிருப்பு இல்லம் பேணிச் செல்வதற்கு ஒரே கட்டடிடத்தில் 3 மாடி வீடு அலகுகளுக்காக 2017 ஆகஸ்ட் 30 தொடக்கம் 2022 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையான காலத்திற்கு தொடர்புடையதாக குத்தகை ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டிருந்தது, 2019 ஏப்ரல் 18 ஆம் திகதி தொடக்கம் இந்த தூதரகத்தின் ஒரு உத்தியோகத்தர் மட்டும் கடமையில் | பலஸ்தீனத்தில் நிரந்தர பிரதிநிதித்துவ அலுவலகம், நிரந்தர பிரதிநதித்துவ உத்தியோகப்பூர்வ இல்லம் மற்றும் குடியிருப்பு இல்லம் ஆகிய மூன்றும் ஒரே கட்டிட சுற்றாடலினுள் அமைந்துள்ளது. வாடகை ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டிருப்பது அந்த முழு கட்டிடத்திற்காகவாகும்.<br><br>பலஸ்தீனத்தில் காணப்படுகின்ற அரசியல் மற்றும் பாதுகாப்பு காரணங்களினால் இந்த சுற்றாடல் தொடர்ந்து பேணிச் செல்வதற்கு ஏற்பட்டிருந்ததுடன், அக் காரணத்தினால் முழு கட்டிடத்திற்காகவும் | அரச பணத்தினை விவேகத்துடன் செலவு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஈடுபட்டுள்ளதுடன் அத் தூதரகத்தினால் பயன்படுத்தப்படாத சுற்றாடலுக்காக 2019 மே தொடக்கம் 2021 பெப்ரவரி வரை கட்டிடங்கள் வாடகையாக ரூபா 1,428,887 உம், 2019 மே தொடக்கம் 2020 சனவரி வரை மின்சாரம் மற்றும் நீருக்காக ரூபா 45,500 உம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 1,474,387 பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத சுற்றாடலுக்காக பயனற்ற செலவொன்று ஏற்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தங்களுக்கு தொடர்புடைய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய தொகையான ரூபா 1,474,387.00 கொடுப்பனவு செய்வதற்கு ஏற்பட்டமையை குறிப்பிடுகின்றேன். |

## 3.6 முகாமைத்துவ நலிவுகள்

-------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்காள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1972 ஆம் ஆண்டின் கொள்வனவு செய்யப்பட்ட சுவிடனின் இலங்கை உயர்ஸ்தானிகர் உத்தியோகப்பூர்வ இல்ல கட்டிடம் 2011 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. மீள் கட்டுமானம் அல்லது புதிய கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் 2020 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் வாடகையாக ரூபா 20,826,523 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் 2019 ஆம் ஆண்டில் மீள்கட்டுமான செயன்முறை ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் சுவிடன் பொறியியாளர் ஆலோசனை சங்கமொன்று தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டிருந்தது. அவ் ஆலோசனை சங்கத்தின் பரிந்துரை தொழிநுட்ப மீளாய்வு குழு மீளாய்வின் பின்னர், அமைச்சு ஆலோசனை குழு (CPCM) அச் சூழலிலேயே புதிய உத்தியோகப்பூர்வ இல்லமொன்று | சொத்துக்கள் உகந்த முறையில் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிர்மாணித்தல் நீண்ட காலமாக அரசிற்கு பயனுள்ளதாக பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அதற்காக கெபினெட் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக வரைவு செய்யப்பட்ட அமைச்சரவை குறிப்பாணை முன்வைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அவஸ்திரேலியாவில் கென்பேரா இல் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு சொந்தமான 02 கட்டிடங்கள் 2007 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிலிருந்து பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அக் கட்டிடங்கள் மீள்கட்டமைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணத்தினால் 2020 ஆம் ஆண்டில் கட்டிட வாடகையாக ரூபா 6,609,300 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அமைச்சரவை அங்கீகாரம் அடிப்படையில் மீள்கட்டமைப்பு செயன்முறை ஆரம்பிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் தகுதிபெற்ற பொறியியலாளர் கம்பயினிடமிருந்து விலைகள் கோரப்படுமாறு கென்பெராவில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதன் இடையில் மதிப்பிற்குரிய வெளிநாட்டு அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் பொறியியலாளர் ஆலோசனை சேவைகளுக்காக மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் பேராசிரியரொருவரின் சேவை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் உகந்த முறையில் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | 1976 ஆம் அண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கென்யாவின் இலங்கை உயர்ஸ்தானிகர் உத்தியோகப்பூர்வ இல்லமாக பயன்படுத்தப்பட்ட கட்டிடம் 2014 ஆம் ஆண்டிலிருந்து | அமைச்சரவை அங்கீகாரம் 2018 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும் முன்மொழியப்பட்ட நிர்மாணிப்பு திட்டம் உண்மை தேவையை | சொத்துக்கள் உகந்த முறையில் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அக் கட்டிடம் மறுசீரமைப்பு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் 2020 ஆம் ஆண்டில் கட்டிட வாடகையாக ரூபா 3,361,960 கொடுப்பனவு செய்வதற்கு ஏற்பட்டிருந்தது. | விஞ்சி செல்லப்படுகின்றமையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பணத்திற்கு பொருந்தக்கூடியவாறான உத்தியோகப்பூர்வ இல்லம் நிர்மாணிப்பதற்காக மீண்டும் திட்டங்கள் தயாரிக்கப்படுவதற்கு தீர்மாணிக்கப்பட்டுள்ளது. மேலும் காணப்படுகின்ற நிதி நிலை கருத்திற் கொள்ளப்பட்டு கென்பரா மற்றும் ஸ்டொக்ஹோம் இல் அமைந்துள்ள தொடர்புடைய கட்டிடங்களின் மறுசீரமைப்பு மற்றும்/அல்லது நிர்மாணிப்பின் முதற் படி நிறைவடையும் வரையில் நிர்மாணிப்பு செயன்முறை தாமதமாக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | வெளிநாட்டு தூதரகங்களுக்காக பதவியணியினர் நியமிக்கப்படும் போது ஒவ்வொரு நாடுகளின் பிரகாரம் பயன்படுத்தப்படும் முறையான அளவுகோள்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கையொன்று முன்வைக்குமாறு 2018 ஆகஸ்ட் 07 ஆம் திகதி நடத்தப்பட்ட அரச கணக்குகள் குழுவின் கட்டளை இலக்கம் 07 இன் ஊடாக பரிந்துரைக்கப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டு இறுதி வரையில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு தூதரகங்களுக்காக பதவியணியினர் நியமிக்கப்படும் போது பயன்படுத்தப்படும் அளவீடுகள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் குழுவின் கட்டளை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |